**ஜூலை – 04**


# TNPSC துளிகள்

- ஜாரெட் குஷ்னரின் ஆதரவுடன் வியோசா-நார்டா பாதுகாக்கப்பட்ட பகுதியில் அமைக்கப் படும் ஆடம்பர விடுதித் திட்டத்திற்கு எதிராக அல்பேனியா நாட்டில் 'ஃபிளமிங்கோ புரட்சி' நடைபெற்று வருகிறது.
    - சுற்றுச்சூழல் கவலைகள் காரணமாக தொடங்கிய இந்தப் போராட்டங்கள் தற்போது பொறுப்புக் கூறலுக்கான பரந்த கோரிக்கைகளாக விரிவடைந்துள்ளன; இத்திட்டம் அமையும் பகுதியானது ஃபிளமிங்கோக்கள் மற்றும் 70-க்கும் மேற்பட்ட அழிந்து வரும் உயிரினங்களின் புகலிடமாக உள்ளது.
- சீஷெல்ஸ் நாட்டிற்கான அரசு முறைப் பயணத்தின் போது, பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்நாட்டின் உயரிய விருதான "கார்டியன் ஆஃப் தி ப்ளூ ஹொரைசன்" (Guardian of the Blue Horizon) வழங்கப்பட்டது.
- பிராந்திய தடுப்பு மற்றும் இந்தோ-பசிபிக் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக, மேற்கு பசிபிக் பெருங்கடலில் 'வாலியண்ட் ஷீல்ட் 2026' மற்றும் 'ரெசல்யூட் டிராகன் 26' ஆகிய ராணுவப் பயிற்சிகளை அமெரிக்கா தொடங்கியுள்ளது.
    - வாலியண்ட் ஷீல்ட் 2026 பயிற்சியில் அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா மற்றும் நியூசிலாந்து ஆகியவை ஈடுபடுகின்றன; அதேவேளையில் ரெசல்யூட் டிராகன் 26 என்பது தீவுப் பாதுகாப்பு, கூட்டுத் தலைமை மற்றும் பல-கள செயல்பாடுகளை மையமாகக் கொண்ட அமெரிக்க-ஜப்பான் கூட்டுப் பயிற்சி ஆகும்.
- ஜெர்மனியின் ஹாம்பர்க்கில் நடைபெற்ற ஹாம்பர்க் நீடித்த நிலைத்தன்மை மாநாடு (HSC) 2026-இல், ஐக்கிய நாடுகள் சபையின் (UN) 2026 ஆம் ஆண்டிற்கான நீடித்த வளர்ச்சி அறிக்கை வெளியிடப்பட்டது.
    - இது உலகளாவிய வடக்கு மற்றும் உலகளாவிய தெற்கு நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பின் மூலம் நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDGs) செயல்படுத்துவதை ஊக்குவிக்கும் ஒரு வருடாந்திர சர்வதேச பல-பங்குதாரர் மன்றமாகும்.
- சீஷெல்ஸ் நாட்டின் 50-வது சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்; இதன்மூலம் இந்தச் சிறப்பைப் பெறும் முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
    - 1976 ஆம் ஆண்டு ஜூன் 29 அன்று ஐக்கிய பேரரசிடமிருந்து (UK) சீஷெல்ஸ் சுதந்திரம் பெற்றது; 2026 ஆம் ஆண்டானது அதன் சுதந்திரம் மற்றும் இந்தியா-சீஷெல்ஸ் இராஜதந்திர உறவுகளின் 50-வது ஆண்டைக் குறிக்கிறது.
- இந்தியா, சிங்கப்பூர் மற்றும் மலேசியா இடையே டிஜிட்டல் இணைப்பை வலுப்படுத்துவதற்காக, I-2SEA (இந்தியா-சிங்கப்பூர்-மலேசியா) கடலடி கம்பிவடத் திட்டமானது 2026 ஆம் ஆண்டு ஜூலை 2 அன்று வெளியிடப்பட்டது.
    - 3,600 கி.மீ நீளமுள்ள இந்த ஒளியிழை கடலடி கம்பிவடத் திட்டம் இந்தியாவில் மச்சிலிப்பட்டினம் (ஆந்திரப் பிரதேசம்) மற்றும் தென் சென்னை (தமிழ்நாடு) ஆகிய இடங்களில் தரை நிலையங்களைக் கொண்டிருக்கும்.
- 1949 ஆம் ஆண்டு இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI) நிறுவப்பட்டதைக் குறிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1 ஆம் தேதி பட்டயக் கணக்காளர்கள் (CA) தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## புதிய சோழர் காலக் கல்வெட்டுகள் - அரியலூர்

- தமிழ்நாட்டின் அரியலூர் மாவட்டம் கொளத்தூரில் உள்ள ஸ்ரீ சுந்தரேஸ்வரர் கோவிலில், மாமன்னர் ராஜராஜ சோழனின் பேரனான முதலாம் ராஜாதிராஜனுடன் தொடர்புடைய மூன்று புதிய கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- இதில் ஒரு கல்வெட்டானது முதலாம் ராஜாதிராஜனின் (கி.பி. 1044-1052) ஆட்சிக் காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது.
- மற்றொரு கல்வெட்டு, இக்கோவில் பாண்டியர் மற்றும் விஜயநகரப் பேரரசு காலங்களிலும் வழக்கில் இருந்ததை உறுதிப்படுத்துகிறது.
- இக்கல்வெட்டுகள் கோவில் மற்றும் சோழப் பேரரசு பற்றிய புதிய வரலாற்றுச் சான்றுகளை வழங்குகின்றன.
- இந்த ஆய்வின் போது கோவிலுக்கு அருகே தொல்லுயிர் படிமங்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.




# தேசியச் செய்திகள்

## ஒருங்கிணைந்த போர் குழுக்கள்

- இந்திய ராணுவம் தனது முதல் 'ஒருங்கிணைந்த போர் குழுக்களை' (IBGs) 2026 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் மேற்கு வங்கத்தின் பனகரில் உள்ள XVII படையின் (மலைப் பாங்குத் தாக்குதல் படை) கீழ் பயன்பாட்டுக்குக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளது.
- IBG என்பது காலாட்படை, பீரங்கிப்படை, பொறியாளர்கள், சமிக்ஞைகள், வான் பாதுகாப்பு, தளவாடங்கள் மற்றும் மருத்துவப் பிரிவுகள் ஆகியவற்றை ஒரே தலைமையின் கீழ் ஒருங்கிணைக்கும் 5,000-க்கும் மேற்பட்ட வீரர்களைக் கொண்ட

பிரிகேட்/படைப்பிரிவு அளவிலான, தற்சார்புடைய ஒரு போர்ப் படையாகும்.

- குறிப்பாக மலைப்பாங்கான நிலப்பரப்புகளில் உள்ள சீன எல்லையில் படைகளை விரைவாகத் திரட்டுவதற்கும் (48 மணி நேரத்திற்குள்) மற்றும் தாக்குதல், தற்காப்பு நடவடிக்கைகளுக்காகவும் IBG-கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- இந்தக் கருத்துரு ஜெனரல் பிபின் ராவத்தால் முன்மொழியப்பட்டு, 2019-ஆம் ஆண்டில் IX படை மற்றும் ஹிம்விஜய் பயிற்சியின் போது முதன்முதலில் சோதிக்கப்பட்டது.
- ருத்ரா பிரிகேடுகள்/படைப்பிரிவுகள், பைரவ் பட்டாலியன்கள், திவ்யாஸ்த்ரா பேட்டரிகள் மற்றும் சக்திபான் பிரிவுகளுடன் இணைந்து, தனது பரந்த படை நவீன மயமாக்கலின் ஒரு பகுதியாக 2029 ஆம் ஆண்டிற்குள் IBG ஆக்கத்தை முடிக்க ராணுவம் திட்டமிட்டுள்ளது.




## ஆரோக்கிய சேது 2.0




- புது தில்லியின் விஞ்ஞான் பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெகத் பிரகாஷ் நட்டா 'ஆரோக்கிய சேது 2.0' மற்றும் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டத்தின் (ABDM) கீழான புதிய டிஜிட்டல் சுகாதார முன்னெடுப்புகளைத் தொடங்கி வைத்தார்.
- ஆரோக்கிய சேது 2.0 செயலியானது கோவிட்-19 தொடர்பு-தடமறிதல் செயலியிலிருந்து, ABDM உடன் ஒருங்கிணைக்கப்பட்ட தனிப்பட்ட சுகாதாரப் பதிவு (PHR) செயலியாக மாற்றப்பட்டுள்ளது.
- பயனர்கள் ABHA (ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்கு) கணக்கை உருவாக்கவும் நிர்வகிக்கவும், ஒப்புதலுடன் டிஜிட்டல் சுகாதாரப் பதிவுகளைப் பாதுகாப்பாகப்

பகிரவும், மருத்துவமனைப் பதிவுகளை விரைவாக மேற்கொள்ள Scan & Share அம்சத்தைப் பயன்படுத்தவும் இது அனுமதிக்கிறது.

- டிஜிட்டல் சுகாதாரம் மற்றும் காப்பீட்டுத் தொகை கோரல்களை தரப்படுத்துவதற்கான NHCX (தேசிய சுகாதார உரிமை கோரல்கள் பரிமாற்றம்), மருந்துப் பதிவேடு, CLCI மற்றும் BHTS ஆகியவையும் இந்த அறிமுகத்தில் அடங்கும்.
- 2026 ஆம் ஆண்டு ஜூன் மாத நிலவரப்படி, ABDM-இன் கீழ் 90 கோடிக்கும் அதிகமான ABHA கணக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன; மேலும் 4.8 லட்சத்திற்கும் அதிகமான சுகாதார மையங்களும், 9.5 லட்சத்திற்கும் அதிகமான மருத்துவர்களும் பதிவு செய்யப் பட்டுள்ளனர்.

# சர்வதேசச் செய்திகள்

## அமெரிக்காவில் பிறப்புரிமை குடியுரிமை





- அமெரிக்காவில் ஆவணமற்ற அல்லது தற்காலிகமாகப் குடியேறியவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கான குடியுரிமையைக் கட்டுப்படுத்தும் நிர்வாக உத்தரவை நிராகரித்த அமெரிக்க உச்ச நீதிமன்றம், பிறப்புரிமை குடியுரிமையை உறுதி செய்துள்ளது.
- அமெரிக்காவில் பிறந்து அதன் அதிகார வரம்பிற்கு உட்பட்ட அனைத்து நபர்களுக்கும் குடியுரிமை வழங்கும் 14-வது திருத்தத்தை நீதிமன்றம் ஆதாரமாகக் கொண்டது.
- வெளிநாட்டவர்களுக்கு அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளுக்கான குடியுரிமையை அங்கீகரித்த 1898 ஆம் ஆண்டு வோங் கிம் ஆர்க் வழக்கின் முன் தீர்ப்பை இந்தத் தீர்ப்பு மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.
- அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்ட அந்த நிர்வாக உத்தரவு, குடியேற்றக் கட்டுப்பாடுகளின் ஒரு பகுதியாகும்; இது கீழ் நீதிமன்றங்களால் முடக்கப்பட்டது.
- குடிமக்கள் அல்லாதவர்களின் குழந்தைகளை தானியங்கிக் குடியுரிமையிலிருந்து

விலக்க அந்த உத்தரவு முற்பட்டதுடன் ஆண்டுதோறும் 2,50,000-க்கும் மேற்பட்ட பிறப்புகளைப் பாதிக்கும் வகையிலிருந்தது குறிப்பிடத்தக்கது.

## HIV/AIDS பிரகடனம் - UNGA

- 2030 ஆம் ஆண்டிற்குள் எய்ட்ஸ் (AIDS) நோயைப் பொது சுகாதார அச்சுறுத்தல் என்ற நிலையிலிருந்து முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்த, எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பான 2026 ஆம் ஆண்டு அரசியல் பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA) ஏற்றுக்கொண்டது.
- இது 2030-ஆம் ஆண்டிற்கான 95-95-95 இலக்குகளை மீண்டும் உறுதிப்படுத்துவதுடன் இதன்படி, எச்.ஐ.வி (HIV) பாதித்தவர்களில் 95% பேர் தங்கள் பாதிப்பு நிலையை அறிந்திருக்க வேண்டும், 95% பேர் சிகிச்சை பெற வேண்டும், மற்றும் 95% பேர் வைரஸ் ஒடுக்கத்தை அடைந்திருக்க வேண்டும்.
- 4 கோடி பேருக்கு எச்.ஐ.வி சிகிச்சையளிக்கவும், ரெட்ரோ வைரஸ் எதிர்ப்புப் பொருள் (ARV) அடிப்படையிலான தடுப்பு முறைகளை 2 கோடி பேருக்கு விரிவுபடுத்தவும், 2030-ஆம் ஆண்டுக்குள் ஆண்டுதோறும் 21.9 பில்லியன் அமெரிக்க டாலர்களைத் திரட்டவும் இது இலக்கு நிர்ணயித்துள்ளது.
- பாலின சமத்துவம், எச்.ஐ.வி தொடர்பான களங்கம் மற்றும் பாகுபாடுகளை ஒழித்தல், வலுவான சமூகம்-சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் மலிவான எச்.ஐ.வி மருந்துகள் மற்றும் நோயறிதல்களுக்கான பரந்த அணுகல் ஆகியவற்றை இப்பிரகடனம் ஊக்குவிக்கிறது.
- உலகளாவிய முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்காக UNAIDS-க்கு வருடாந்திர முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், 2031-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் (UNGA) உயர்மட்டக் கூட்டத்தை நடத்தவும் இது அழைப்பு விடுக்கிறது.




## யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தலைநகரம் - இத்தாலி

- மொத்தம் 61 பாதுகாக்கப்பட்ட தளங்களுடன், உலகிலேயே அதிக யுனெஸ்கோ (UNESCO) உலகப் பாரம்பரியத் தளங்களைக் கொண்ட நாடாக இத்தாலி உருவெடுத்து உள்ளது.
- இத்தாலி 55 கலாச்சாரப் பாரம்பரியத் தளங்களையும், 6 இயற்கை மரபுத் தளங்களையும் கொண்டுள்ளதுடன் இது எந்தவொரு நாட்டிற்கும் இல்லாத அதிகபட்ச


அளவாகும்.

- 2025-ஆம் ஆண்டில் இணைக்கப்பட்ட சார்டினியாவின் வரலாற்றுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த 'டோமஸ் டி ஜனாஸ்' இறுதிச் சடங்கு மரபு, இதிலுள்ள சமீபத்திய சேர்க்கையாகும்.
- கலாச்சார அல்லது இயற்கையான முக்கியத்துவம் வாய்ந்த சிறந்த உலகளாவிய மதிப்புடைய (OUV) தளங்களுக்கு யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய அந்தஸ்தை வழங்குகிறது.
- ரோம், புளோரன்ஸ், வெனிஸ், பைசா, பாம்பீ, டோலமைட்ஸ் மற்றும் எட்னா மலை போன்ற முக்கிய அடையாளங்களை இத்தாலியின் பாரம்பரியம் உள்ளடக்கியுள்ளது.
- இத்தாலியின் வளமான பாரம்பரியம், ரோமானியப் பேரரசு, மறுமலர்ச்சிக் காலம், இடைக்கால நகரங்கள், தொல்பொருள் தளங்கள் மற்றும் பல்வேறு இயற்கை நிலப்பரப்புகளின் மரபைப் பிரதிபலிக்கிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## அகில இந்தியப் புலிகள் மதிப்பீடு 2026




- தெலங்கானாவில் உள்ள அமராபாத் புலிகள் காப்பகத்தில் (ATR) புலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அகில இந்தியப் புலிகள் மதிப்பீடு (AITE) 2026-இன் முதற்கட்ட முடிவுகள் தெரிவிக்கின்றன.
- நாடு முழுவதும் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் புலிகள்


கணக்கெடுப்பான AITE ஆனது தடயங்கள், புகைப்படக் கருவிப் பொறிகள் மற்றும் மரபணு (DNA) மாதிரிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது.

- ATR முந்தைய கணக்கெடுப்பில் புலிகளின் பதிவு 36 ஆக இருந்த நிலையில் 2026 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் 42 புலிகள் பதிவு செய்யப்பட்டுள்ளது புலிகளின் வலுவான இருப்பைக் காட்டுகிறது.
- வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972-இன் கீழ் அட்டவணை I-இல் இடம்பெற்றுள்ள இந்திய சாம்பல் ஓநாயும் இந்தக் கணக்கெடுப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இதற்கு முந்தைய அகில இந்தியப் புலிகள் மதிப்பீட்டின்படி (2022), இந்தியாவில் 3,682 காட்டுப் புலிகள் இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது; இது உலகளாவிய காட்டுப் புலிகளின் எண்ணிக்கையில் சுமார் 75% ஆகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ஐ.நா நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீடு 2026

- 2026 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் (UN) நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG) குறியீட்டில், இந்தியா 94-வது இடத்திற்கு (மதிப்பெண் 68.3/100) முன்னேறியுள்ளது; இது இதுவரை இல்லாத மிக உயர்ந்த நிலையாகும்.
- 2015ம் ஆண்டிலிருந்து இந்தியா 18 இடங்கள் முன்னேறியுள்ளது ஆயினும் தெற்காசியாவில் பூட்டான், மாலத்தீவு, நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்குப் பின்னாலேயே உள்ளது.
- 17 நீடித்த வளர்ச்சி இலக்குகளில் 13 இலக்குகளில் இந்தியா சவால்களை எதிர் கொள்வதாகவும், 2030-ஆம் ஆண்டிற்கான இலக்குகளை அடைவதற்கான பாதையில் இல்லை எனவும் இவ்வறிக்கை கூறுகிறது.
- பசியின்மை (SDG 2), நல்ல ஆரோக்கியம் (SDG 3), பாலின சமத்துவம் (SDG 5), பருவநிலை நடவடிக்கை (SDG 13), மற்றும் அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள் (SDG 16) ஆகியவை முக்கிய கவலைக்குரிய இலக்குகளாகும்.
- மின்சார அணுகல் (SDG 7) மற்றும் டிஜிட்டல் இணைப்பு (SDG 9) ஆகியவற்றில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.





# மாநிலச் செய்திகள்

## பிரதமரின் குடும்ப நலக் கண்காணிப்புச் செயலி

- குஜராத்தின் காந்திநகரில் 'பிரதமரின் குடும்ப நலக் கண்காணிப்புச் செயலி (PM-FCT)

சோதனைத் திட்டமாகத் தொடங்கப்பட்டுள்ளது.

- இது கர்ப்பிணிப் பெண்கள், பிறந்த குழந்தைகள், சிறார்கள் மற்றும் வளரிளம் பருவத்தினரின் (18 வயது வரை) ஆரோக்கியம், ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வைக் கண்காணிப்பதற்கான ஒரு குடும்ப-மைய டிஜிட்டல் தளமாகும்.
- இது பிரசவத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய கவனிப்பு, நோய்த்தடுப்பு, ஊட்டச்சத்து, வளர்ச்சி, பள்ளியில் சேருதல் மற்றும் வளரிளம் பருவத்தினரின் ஆரோக்கியம் ஆகியவற்றை நிகழ்நேரத்தில் கண்காணிக்க வழிவகை செய்கிறது.
- இந்தத் தளமானது டிஜிட்டல் சுகாதாரக் கடவுச்சீட்டுகள், தகவல் பலகைகள் மற்றும் தவறவிடப்பட்ட தடுப்பூசிகள் மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளுக்கான தானியங்கி எச்சரிக்கைகளை உள்ளடக்கியது.
- சேவை வழங்கலை மேம்படுத்தவும், தரவுகள் மீண்டும் மீண்டும் பதிவு செய்யப் படுவதைக் குறைக்கவும் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு, சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் கல்வித் தரவு தளங்களின் தரவுகளை இது ஒருங்கிணைக்கிறது.




# முக்கிய தினங்கள்

## சர்வதேசப் பாராளுமன்ற தினம் 2026 – ஜூன் 30




- 1889-ஆம் ஆண்டு சர்வதேசப் பாராளுமன்ற ஒன்றியத்தின் (IPU) தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.
- இந்த தினமானது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் (UNGA) 2018-ஆம் ஆண்டில்

நிறுவப் பட்டது.

- ❖ சட்டங்களை உருவாக்குதல், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்தல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் பாராளுமன்றங்களின் பங்கை இது எடுத்துக்காட்டுகிறது.
- ❖ 1976 ஆம் ஆண்டு முதல், பாராளுமன்ற உறுப்பினர்களின் மனித உரிமைகளுக்கான IPU குழு, மனித உரிமை மீறல்களை எதிர்கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாப்பதற்காகச் செயல்பட்டு வருகிறது.
- ❖ 2026 ஆம் ஆண்டிற்கான இதன் கருத்துரு "Bring Human Rights into Focus" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★